தமிழ்நாட்டிற்கான ஊரக உட்கட்டமைப்பு மற்றும் குளச்சல் துறைமுக மேம்பாட்டிற்கான நபார்டு (NABARD) வங்கியின் நிதியுதவியினை விரைவில் விடுவிக்கக்கோரும் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் கடிதத்தை நேற்று (19.08.2025) புதுதில்லியில் ஒன்றிய அரசின் நிதித் துறை அமைச்சர் திருமதி நிர்மலா சீதாராமன் அவர்களிடம் தமிழ்நாடு அரசின் நிதி, சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றத் துறை அமைச்சர் தங்கம் தென்னரசு, நாடாளுமன்ற உறுப்பினர் கனிமொழி கருணாநிதி ஆகியோர் நேரில் சந்தித்து வழங்கினார்கள்.

திருவள்ளூர் மாவட்டம் - பள்ளிக் கல்வித் துறை சார்பாக

மாவட்ட அளவிலான தடகளப் போட்டிகள்!

அமைச்சர் ஆவடி சா.மு.நாசர் ஒலிம்பிக் தீபம் ஏற்றி துவக்கி வைத்தார்!

திருவள்ளூர் ஆக 20; திருவள்ளூர் மாவட்டம் ஆவடி தமிழ்நாடு சிறப்பு காவல் படை 2 ஆம் அணி மைதானத்தில் பள்ளி கல்வித் துறை சார்பாக மாவட்ட அளவிலான தடகளப் போட்டிகள் நடைபெற்றது இதில் தமிழ்நாடு சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர் நலத் துறை அமைச்சர் ஆவடி சா.மு.நாசர் ஒலிம்பிக் ஜோதியினை ஏற்றி வைத்து முதல் 3 இடங்களை பிடித்த மாணவ மாணவியர்களுக்கு பதக்கம் மற்றும் பாராட்டு சான்றிதழ் வழங்கினார்

இதில் சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளி நாடு வாழ் தமிழர் நலத் துறை அமைச்சர் தெரிவித்தாவது,

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைகிணங்க இன்று திருவள்ளூர் மாவட்ட அளவிலான தடகளப் போட்டிகள் 202526 நடைபெற்றவுள்ள இந்த விளையாட்டு போட்டி சிறுவயதில் ஆடிப்பாடி விளையாட்டும் போட்டு தன் இளமையை வீணாக்காமல் நம்முடைய மாணவச் செல்வங்கள் எல்லாம் இது போன்ற விளையாட்டுத்துறைகளில் கவனம் செலுத்த வேண்டும். தமிழக முதல்வர் அவர்களும் தமிழக துணை முதல்வர் அவர்களும் விளையாட்டுத் துறைக்கு பொறுப்பேற்ற பிறகு இருந்து நம்முடைய இந்தியாவில் , தமிழ்நாட்டில் பலதரப்பட்ட விளையாட்டு போட்டிகளை நடத்தி அதன் மூலம் சாதனைகளை படைத்தவர் மாண்புமிகு துணை முதல்வர் அவர்கள். விளையாட்டுத் துறை அமைச்சராக இருக்கின்ற உதயநிதி ஸ்டாலின் அவர்கள் வளர்ந்து வரும் மாணவச் செல்வங்களுக்கு எல்லாம் விளையாட்டு துறையில் ஒரு இடம் பிடித்து அவர்களுக்கு சிறப்பு செய்து உலக அளவில் மாணவ செல்வங்கள் எல்லாம் விளையாட்டு போட்டியில் தலைசிறந்து உடலளவும் மன அளவும் அவர்கள் திடமாகவும் உறுதியாகவும் இருப்பதற்கு விளையாட்டு துறைக்கு முன்னுரிமை வழங்கி துணை முதல்வர் அவர்கள் சிறப்பான முறையில் வழிநடத்தி செல்கிறார்.

விளையாட்டுத்துறைக்கு தமிழக முதலமைச்சர் அவர்களின் தனிச்சிறப்பு ரூபாய் 200 கோடி ஒதுக்கீடு செய்துள்ளார். ஒவ்வொரு மாவட்டத்திலும் ஒவ்வொரு தொகுதிகளும் இங்கு இருக்கின்ற பூந்தமல்லி தொகுதியில் கூட 5 கோடி ரூபாய் ஸ்டேடியம் கட்டுவதற்கு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.. அதேபோல் ரஷ்யாவில் நடக்க இருந்த செஸ் போட்டி அங்கு போரின் சூழல் இருந்ததால் நடைபெறவில்லை ஆகவே இந்த செஸ் போட்டியை எங்க நடத்த வேண்டும் என்று நினைக்கும் பொழுது இந்தியாவில் நடத்தலாம் என்று எண்ணத்தில் வைத்து இந்தியாவில் எந்த இடம் என்று தேர்ந்தெடுக்கும் போது தமிழ்நாட்டை தேர்ந்தெடுத்தார்கள் ஏனென்றால் தமிழ்நாட்டில் மிக சிறந்த முறையில் சிறப்பான வேலைகளை செய்வார்கள் இந்த செஸ் போட்டியை நடத்துவதற்கு மூன்று ஆண்டுகள் ஆகும் ஆனால் நம் தமிழக முதல்வர் அவர்கள் மூன்று மாதத்தில் அனைத்து ஏற்பாடுகளையும் சிறப்பான முறையில் செய்து செஸ் போட்டியை சிறப்பாக செய்து தமிழகத்திற்கு பெருமை சேர்த்திருக்கிறார். ஆகவே முதலமைச்சர் அவர்கள் ஒவ்வொன்றையும் வடிவமைத்து பள்ளிக் கல்வி மாணவச் செல்வங்கள் அனைவரும் இதில் பயிற்சி பெற்ற மாணவ செல்வங்கள் எல்லாம் வந்து இருக்கீங்க வந்த மாணவ செல்வங்கள் அனைவருக்கும் உலக அளவில் பெயர்பெற வேண்டும் என வாழ்த்துகிறேன் இவ்வாறு சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர் நலத் துறை அமைச்சர் தெரிவித்தார்.

இன்று நடைபெற்ற நிகழ்ச்சியில், கல்வி துறையின் 11 வருவாய் கோட்டங்களான பூவிருந்தவல்லி, ஆவடி, வில்லிவாக்கம், பொன்னேரி, சோழவரம், கும்மிடிப்பூண்டி, திருத்தணி, எல்லாபுரம், கடம்பத்தூர், திருவள்ளூர், அத்திமாஞ்சேரிபேட்டை ஆகியவற்றில் மாவட்ட அளவில் 14 வயதுக்குட்பட்ட 17 வயதிற்கு உட்பட்ட 19 வயதுக்குட்பட்ட பிரிவுகளின் கீழ் மாணவ மாணவிகளுக்கு போட்டிகள் நடத்தப்பட்டது 100 மீ,200மீ, 400மீ,800மீ, 1500மீ, 3000 மீ, நீளம் தாண்டுதல், டிரிப்புல் ஜம்ப், . long jump, triple jump,realy events, 400x100மீ தொடர் ஓட்டம் ஆகிய போட்டிகள் நடத்தப்பட்டது. இப்போட்டிகளில் 333 மாணவர்களும், 275 மாணவிகளும் ஆர்வத்துடன் கலந்துகொண்டனர். இதில் வெற்றிபெற்ற 354 மாணவர்களில் 118 தங்கம், 118 வெள்ளி மற்றும் 118 வெண்கல பதகங்கள் பெற்றவர்கள் மாநில அளவில் நடைபெறவுள்ள போட்டிகளில் கலந்து கொள்ள உள்ளனர்.இப்போட்டிகளில் 121 அரசு பள்ளி, 163 தனியார் பள்ளி மற்றும் 13 அரசு உதவிபெறும் பள்ளிகளை சேர்ந்த மாணவர்கள் கலந்துகொண்டனர்.

இந்நிகழ்ச்சியில், மாவட்ட ஆட்சித் தலைவர் மு.பிரதாப், சட்டமன்ற உறுப்பினர் ஆ. கிருஷ்ணசாமி, ஆவடி மாநகராட்சி மேயர் கு.உதயகுமார், மாவட்ட முதன்மை கல்வி அலுவலர் (பொ) ம.மோகனா, மாநகர கழக பொறுப்பாளர் சன்.பிரகாஷ், மாநில சிறுபான்மையினர் அணி இணை செயலாளர் சி.ஜெரால்டு, பொதுக் குழு உறுப்பினர் விமல் வர்ஷன் பகுதி கழக செயலாளர்கள் பொன்.விஜயன், சே.பிரேம் ஆனந்த், தங்கம் முரளி, மாவட்ட வழக்கறிஞர் அணி அமைப்பாளர் பெ.வி னாத் கீழ்மணம்பேடு அரசு மகளிர் மேல்நிலைப்பள்ளி தலைமை ஆசிரியர் ஜானகி அமுதா, ஆசிரியர்கள், உடற்கல்வி ஆசிரியர்கள் மற்றும் திரளான மாணவ மாணவியர்கள் கலந்து கொண்டனர்.

துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் தலைமையில்

கழக செய்தி தொடர்புக் குழு நிர்வாகிகள் மற்றும் ஊடக விவாத பங்கேற்பாளர்கள் கலந்துரையாடல் கூட்டம்!

பேராசிரியர் கான்ஸ்டன்டைன் ரவீந்திரன் அறிவிப்பு!

கழக செய்தி தொடர்புக் குழு நிர்வாகிகள் மற்றும் ஊடக விவாத பங்கேற்பாளர்கள் கலந்துரையாடல் கூட்டம் 22.08.2025 வெள்ளிக் கிழமை காலை 10 மணிக்கு அண்ணா அறிவாலயம் கலைஞர் அரங்கில் துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் தலைமையில் கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி முன்னிலையில் நடைபெறுகிறது.

தலைமைக் கழக செய்தித் தொடர்பு குழு நிர்வாகிகள் மற்றும் கழகத்தின் சார்பில் ஊடக விவாதங்களில் பங்கேற்கும் அனைவரும் தவறாமல் கலந்து கொள்ள வேண்டுமென கேட்டுக் கொள்ளப்படுகிறது .

அண்ணா அறிவாலயம்
சென்னை - 18.
19.08.2025

பேரா.கான்ஸ்டன்டைன் ரவீந்திரன்
கழக செய்தித் தொடர்பு செயலாளர்
தி.மு.க.

சென்னை தெற்கு மாவட்டம் வேளச்சேரி மேற்கு பகுதி 177 வது வட்ட தி.மு.க பகுதி கழக பிரதிநிதி நினைவில் வாழும் எஸ்.புகழேந்தி செல்வன் அவர்களின் மறைவுயொட்டி மாவட்ட கழக செயலாளர், அமைச்சர் மா.சுப்பிரமணியன் புகழேந்தி செல்வன் அவர்களின் இல்லத்திற்கு சென்று அவர்களது குடும்பத்தினரை சந்தித்து ஆறுதல் கூறி கழகத்தின் சார்பில் நிதி உதவி அளித்தார்.வட்ட கழக செயலாளர் பொ.த.மதிவாணன் முன்னிலையில் நடை பெற்ற இந்நிகழ்வில் மாமன்ற உறுப்பினர்கள் எஸ்.பாஸ்கர், வே. ஆனந்தம், கழக தா.ரமேஷ், ஜெகதீசன், வி.ஜி.மோகன், பொ.த.எழில்வாணன், சங்கர், மு. ஜெயச்சந்திரன், தியாகராஜன், ரமேஷ், கணேஷ்குமார், சதீஷ், பொன்.சுதாகர், பாஸ்கர், சிவசங்கர், ஹரி பிரபா, ஸ்ரீநாத் மற்றும் பலர் கலந்து கொண்டனர்.

சென்னை - சைதாப்பேட்டையில்

“உங்களுடன் ஸ்டாலின்” திட்ட முகாம்!

அமைச்சர் மா.சுப்பிரமணியன் நேரில் ஆய்வு!

சென்னை, ஆக.20- மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் நேற்று (19.08.2025) சென்னை, சைதாப்பேட்டையில் “உங்களுடன் ஸ்டாலின்” திட்ட முகாமினை பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டு, பெறப்பட்ட மனுக்கள் மீது உடனடி தீர்வுக்கான சான்றிதழ்களை வழங்கினார். பிறகு அவர் செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது:

“உங்களுடன் ஸ்டாலின்“ திட்ட முகாம்

கடந்த ஜூலை திங்கள் 15ஆம் தேதி முதலமைச்சர் அவர்களால் தொடங்கப்பட்ட திட்டம் “உங்களுடன் ஸ்டாலின்” எனும் திட்டம். இந்த திட்டத்தை பொறுத்தவரை 10,000 இடங்களில் முகாம்கள் நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டது. குறிப்பாக நகர்ப்புற பகுதிகளில் 3,768 முகாம்களும், ஊரகப்பகுதிகளில் 6,232 முகாம்களும்நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டிருக்கிறது.

நகர்ப்புற பகுதிகளைப் பொறுத்தவரை 13 துறைகள், 43 சேவைகள் என்கின்ற வகையிலும், ஊரகப் பகுதிகளைப் பொறுத்தவரையிலும் 15 துறைகள், 46 சேவைகள் என்கின்ற வகையிலும் இந்த முகாம்கள் மிகச்சிறப்பாக நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. தொடங்கிய நாள் முதல் 14.08.2025 வரை முதற்கட்டம்முடிவடைந்திருக்கிறது.

தமிழ்நாடு முழுவதும் முடிவுற்றிருக்கின்ற முகாம்களின் எண்ணிக்கை 3561, பெறப்பட்ட மனுக்கள் 30 இலட்சம். இதில் சென்னையைப் பொறுத்தவரை 400 முகாம்கள் என்றுஅறிவிக்கப்பட்டு, இதுவரை நடைபெற்று முடிவடைந்துள்ள முகாம்களின் எண்ணிக்கை 109. சென்னைக்குஇரண்டாம் கட்டம் என்று அறிவிக்கப்பட்டிருக்கும் முகாம்களின் எண்ணிக்கை 148. இன்று சைதாப்பேட்டை 142வது வட்டத்தில் ஒரு முகாம் தொடங்கப்பட்டிருக்கிறது.

இன்று இரண்டாம் கட்டமாக 2,859 முகாம்கள் நடைபெற தொடங்கி இருக்கிறது. இந்த முகாம்கள் 14.09.2025 வரை நடைபெறும், இதனைத்தொடர்ந்து 15.09.2025 முதல் தொடங்கி அக்டோபர் மாதம் வரைமூன்றாம் கட்ட முகாம்கள் நடைபெற இருக்கிறது.

மூன்றாம்கட்டமாக 2,773 முகாம்கள் நடைபெற இருக்கிறது. அக்டோபர் 14 தொடங்கி நவம்பர் 14 வரை 807 முகாம்கள் நடைபெற இருக்கிறது. ஆக ஒட்டுமொத்தமாக தமிழ்நாடு முழுவதிலும் 10,000 முகாம்கள் நடைபெற இருக்கிறது.

நகர்ப்புறங்களைப் பொறுத்தவரை 13 துறைகள் 43 சேவைகள் என்று இன்று முகாம்கள் நடத்தப்பட்டு வருகிறது. பெருநகர சென்னை மாநகராட்சியில், நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத்துறை, மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை, எரிசக்தித் துறை, கூட்டுறவு உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத்துறை, மாற்றுத்திறனாளிகள் நலத்துறை, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை, பிற்படுத்தப்பட்டோர் மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மை யினர் நலத்துறை, தொழிலாளர் நலன் மற்றும் திறன்மேம்பாட்டுத்துறை, வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை, சிறு குறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் துறை, சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத்துறை, தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் டிஜிட்டல் சேவைகள் துறை என்று 13 துறைகள் என 43 சேவைகள் தருகின்ற முகாம்கள் நடத்தப்பட்டு வருகிறது.

இந்த முகாம்களைப்பொறுத்தவரை கலைஞர் மகளிர் உரிமைத் தொகைக்கான விண்ணப்பங்கள் 70 இடங்களில் பூர்த்தி செய்து தரப்படுகிறது. தன்னார்வலர்கள் இதில் பங்கேற்று விண்ணப்பங்களை பூர்த்தி செய்து தருகிறார்கள்.

பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்கள் வேறொருஇடத்தில் ஆன்லைனில் விண்ணப்பம் செய்யும் பணி அலுவலர்களால் நடைபெற்று வருகிறது. இந்தமுகாம்களில் வரும் பொது மக்களுக்கு குடிநீர் வசதி, சிறிய அளவிலான சிற்றுண்டி வசதிகளும் செய்யப்பட்டிருக்கிறது.

பொதுமக்களுக்கு எந்த விதமான இடையூறுகள் இல்லாமல், இடைத்தரகர்கள்இல்லாமல் இந்த முகாம்களில் அரசின் சேவைகளை பெறுவதற்குரிய நடவடிக்கைகளை மாநகராட்சி நிர்வாகம்செய்திருக்கிறது. அந்தவகையில் இந்த முகாம்கள் தமிழ்நாட்டில் மிகச் சிறப்பாக நடத்தப்பட்டுவருகிறது.

எடப்பாடி பழனிச்சாமி தொடர்பான கேள்விக்கு

எடப்பாடி பழனிசாமி எங்கு சென்றாலும் அங்கு ஆம்புலன்ஸ் வருவதாக சொல்றாங்க. அவர் பெரும் பகுதி ஆதரவு திரட்டுவதற்கு பிரதான சாலையில்தான் செல்கிறார். தமிழ்நாட்டில் 108 ஆம்புலன்ஸ் 1330 என்கின்ற எண்ணிக்கையில் இருக்கின்றது. 1330 ஆம்புலன்ஸ்களும் உயிர்காக்கும் சேவையை செய்து கொண்டிருக்கிறது.எங்கேயாவது விபத்து ஏற்பட்டால் 8 முதல் 10 நிமிடங்களுக்குள் ஆம்புலன்ஸ் விரைந்து சென்று உயிர்களை காக்க வேண்டும்.

இன்று உலகத்திலேயே 108 ஆம்புலன்ஸ் சேவை போல வேறு எங்கும்சேவை இல்லை என்று அனைவருமே பாராட்டுகிறார்கள். உடனடியாக உயிர் காப்பாற்றப்பட்டு வருகிறது. இவர் ஆம்புலன்ஸ் வரும் வழியில் கூட்டத்தை கூட்டி நான் வரும் வழியில் ஆம்புலன்ஸ் விடுவதாகசொல்லி இருக்கிறார். தமிழில் இதற்கு பழமொழி உண்டு, “அரண்டவன் கண்ணுக்கு மிரண்டதெல்லாம்பேய்” என்றெல்லாம் சொல்வார்கள். இந்த ஆம்புலன்ஸ் பார்க்கும்போது அவருக்கு வேறு ஏதோஞாபகம் வருகிறது என்று நினைக்கின்றேன். இது தவறான விஷயம். அதுவும் ஆம்புலன்ஸ் ஓட்டுநர் பெயரை நோட் பன்னு என்றெல்லாம் சொல்கிறார். இது மருத்துவத்துறையில் பணிபுரியும் மருத்துவப்பணியாளர்களை மிரட்டும் தொனி. ஒரு முன்னாள் முதல்வர், மிரட்டுகின்ற தொனியில் பேசுவதுஎன்பது அநாகரிகமாக செயல். அவர் இத்துடன் இதனை நிறுத்திக் கொள்ள வேண்டும்.

இவ்வாறு அமைச்சர் மா.சுப்பிரமணியன் தெரிவித்தார்.

இந்நிகழ்வில் பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் திருமதி.ஆர்.பிரியா, மண்டலக்குழுத் தலைவர் கிருஷ்ணமூர்த்தி, மாமன்ற உறுப்பினர்கள் தா.மோகன்குமார், வழக்கறிஞர் ப.சுப்பிரமணி மற்றும் அலுவலர்கள் உடனிருந்தனர்.

பெருநகர சென்னை மாநகராட்சி

பெருநகர சென்னை மாநகராட்சி மாமன்ற கூட்ட நிகழ்ச்சி பற்றிய அறிவிப்பு

(தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் விதிகள் 2023 அத்தியாயம் - 4, பகுதி - 1 விதி எண்.156 (1)ன் கீழ்)

2025-ஆம் ஆண்டு ஆகஸ்ட் திங்கள் 26ஆம் நாள் செவ்வாய்க்கிழமை காலை 10.00 மணிக்கு, மாநகராட்சி மன்ற கூடத்தில் மாமன்ற சாதாரண கூட்டம் நடைபெற உள்ளது. மாமன்ற உறுப்பினர்கள் அனைவரும் தவறாமல் இக்கூட்டத்தில் கலந்து கொள்ள வேண்டுமாய் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

செ.ம.தொ.இ / 957 / வரைகலை / 2025

மேயர்

திருவள்ளூர் தொகுதி களாம்பாக்கத்தில் பாகசாலை, இலட்சுமி விலாசபுரம், களாம்பாக்கம், சின்னமண்டலி, ஒரத்தூர், பெரிகளக்காட்டூர் ஊராட்சிகளுக்கான உங்களுடன் ஸ்டாலின் சிறப்பு திட்ட முகாம் நடைபெற்றது. இம் முகாமில் சட்டமன்ற உறுப்பினர் வி.ஜி.இராஜேந்திரன் பங்கேற்று பொதுமக்களிடமிருந்து பெறப்பட்ட கோரிக்கை மனுக்கள் மீது விரைந்து நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என துறை சார்ந்த அலுவலர்களிடத்தில் கேட்டுக்கொண்டார். இந்நிகழ்ச்சியில் திருத்தணி வட்டாட்சியர் மலர்விழி, வட்டார வளர்ச்சி அலுவலர்கள் ஜே.மாணிக்கம், பிரபாவதி, பல்வேறு துறை சார்ந்த அலுவலர்கள், கிழக்கு ஒன்றிய செயலாளர் எஸ்.மகாலிங்கம், மாவட்ட துணை செயலாளர் சி ஜெயபாரதி, மாவட்ட விவசாய அணி அமைப்பாளர் களாம்பாக்கம் எம்.பன்னீர்செல்வம், மாவட்ட வர்த்தக அணி அமைப்பாளர் வி.எஸ்.நேதாஜி, மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர் (சமூக வலைதளம்) ஆர்.ராசா, நிர்வாகிகள் த.தினகரன், டி.மூர்த்தி, பிரகாசம், பால் ஆர்.பழனி, தாமு, திருவருட்செல்வம், டீ.செல்வம், விஜயராஜ், விஜயன், பரந்தாமன் உள்ளிட்ட கழகத் தோழர்கள், ஏராளமான பொதுமக்கள் பங்கேற்றனர் நிகழ்ச்சியில் பங்கேற்ற அனைவருக்கும் மதிய உணவு வழங்கப்பட்டது.

மதுரவாயல் சட்டமன்றத் தொகுதி, பெருநகர சென்னை மாநகராட்சி, வார்டு147, மதுரவாயல், மேட்டுக்குப்பம், SPP கார்டனில் நடைபெற்ற உங்களுடன் ஸ்டாலின் முகாம் நிகழ்ச்சியில் மதுரவாயல் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் காரம்பாக்கம் க.கணபதி கலந்து ஆய்வு மேற்கொண்டார். இந்நிகழ்வில் மண்டலக் குழுத் தலைவர் நொளம்பூர் வே.ராஜன், பகுதி துணை செயலாளர் எம்.ஏ.செந்தில்சுரேஷ், அவைத் தலைவர் ஆர். கர்ணல், வட்ட கழக செயலாளர்கள் எஸ்.ஜி.மாதவன், எம்.எம்.ஜெயரத்தினம், எம்.ரூபன், எஸ்.ரமேஷ்ராஜ், மாமன்ற உறுப்பினர்கள் ரமணி மாதவன், எம்.இ.ஸ்டாலின், ச.சங்கர்கணேஷ், எம்.சி., மாவட்ட பிரதிநிதிகள் க.பிருந்தாவனம், ச.எழிலரசு மற்றும் பலர் கலந்து கொண்டு சிறப்பித்தார்கள்.